மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 608 திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

608—

‘ டாப்கோ ’ மூலம் முட்டை வாங்கும் திட்டம்.

*5910 திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகம் முழுவதும் சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் முட்டைகளை ‘ டாப்கோ ’ மூலம் வாங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது, ‘ டாப்கோ’ மூலம் முட்டை வாங்குகின்ற திட்டத்தைப் பற்றிய கேள்வி **

—முற்பகல் 10-30

இதிலே டாப்கோ மூலம் முட்டைகள் வாங்குவது பற்றி துணைக் கேள்வி இருந்தால் போடவும். மற்ற விஷயத்திற்கு நீங்கள் தனிக் கேள்வி போடவும்.

திரு. சி. ஞானசேகரன் : ** இன்று டாப்கோ மூலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன் வேகமாக முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாப்கோ மூலம் முட்டைகள் வாங்கினால் தனியாருக்குப் போய்ச் சேரும் பெருமளவு கமிஷனை ஓரளவுக்குத்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தவிர்க்கலாம். 1991-ஆம் ஆண்டுவரை 'டாப்கோ' மூலம் வாங்கப்பட்ட அந்த முட்டைகள் திடீரென நிறுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு மாதம் இருமுறை முட்டை வழங்கப்படுகிறது. ஏறக்குறைய 1½ கோடி முட்டைகள் தேவைப்படுகிறது. 15 நாட்களுக்கு ஒருமுறை 75 லட்சம் முட்டை தேவைப்படுகிறது. 1991—92-ஆம் ஆண்டில் செங்கை-எம்.ஜி.ஆர். வடாற்காடு, அம்பேத்கார், திருச்சி மதுரை, கன்னியாகுமரி, சென்னை ஆகிய மாவட்டங்களில், டாப்கோ, முட்டை வழங்கி வந்தது. ஆனால் டாப்கோ நிறுவனம் எந்த ஒரு மாவட்டத்திற்கும் சப்ளை செய்யக்கூடிய அளவிற்கு உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனம் அல்ல. டாப்கோ நிறுவனம் தனியாரிடம் முட்டைகளை வாங்கி, அதற்குமேல் கொஞ்சம் லாபம் வைத்து, சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கி வந்தது. அதையும் அவர்கள் சரியாக சப்ளை செய்யவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து நேரடியாகவும், எழுத்து மூலமாகவும் புகார்கள் வந்தன. அதன்பேரில், டாப்கோ நிறுவனத்திடம், தனியார் அவர்களுக்கு எந்த விலைக்கு சப்ளை செய்கிறார்களோ, அதே விலைக்கு சத்துணவுத் திட்டத்திற்கு சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், அதற்கு அவர்கள் மறுத்து விட்டார்கள். எனவே, டாப்கோவிற்கு தனியார் என்ன விலைக்குக் கொடுத்தார்களோ, அதே விலைக்கு தனியாரிடமிருந்து நேரடியாக சத்துணவுத் திட்டத்திற்கு முட்டைகள் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனால், டாப்கோவிற்கு அளிக்கப்பட்ட கமிஷன் நிறுத்தப்பட்டது. டாப்கோவிடமிருந்து முட்டைகள் வாங்கியதை, 4 மாத காலத்தில் நிறுத்தியதில், ரூ. 4.94 லட்சம் செலவு மிச்சமாகியிருக்கிறது என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தனியாரிடமிருந்து கோழி முட்டைகளை வாங்குவதிலே நிச்சயமாக கமிஷன் அவர்களுக்கு அதிகமாகப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கிற காரணத்தினால், அரசே ஒரு பெரிய கோழிப் பண்ணையை ஆங்காங்கே நிறுவி, கோழி முட்டைகளை நாமே தனியாகப் பெற்று, சத்துணவு மையங்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த மானியக் கோரிக்கையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள்

TRUTH ALONE TRIUMPHS

இதுபற்றி விரிவாகப் பேசியிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 609, திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

609. ராதாபுரம் தொகுதியில் புதிய தொழிற்சாலை துவங்குதல்

**61—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய பகுதி என்பதால், புதிய திட்டங்கள் உருவாக்க அரசோ, தனியாரோ முன்வந்துள்ளார்களா ?

(ஆ) இல்லையெனில், அரசே முன்வந்து தொழிற்சாலைகள் தொடங்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் தனியார் தொழில் முனைவோர்கள் ஏற்கெனவே தொழில் துவங்கியுள்ளனர்.

(ஆ) இப்பகுதியில் அரசு தொழிற்சாலைகள் தொடங்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி, 1989-இலே, ' இண்டஸ்ட்ரியலி பேக்வர்டு ' என்று அறிவிக்கப்பட்ட போதிலுங்கூட, அதற்குப் பிறகு எந்த ஒரு பெரிய தொழிற்சாலையும் தொடங்கப்படவில்லை. தொழில் முனைவோர்கள் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு நிறைய சலுகைகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருந்துங்கூட, யாரும் முன்வரவில்லை என்பதிலிருந்து, அது மிகவும் பின்தங்கிய பகுதி ; அப்படிப்பட்ட முனைவோர் அங்கே இல்லை என்பது தெரியவருகிறது. ஆகவே, அப்பகுதியிலே அதிகமாகக் கிடைக்கிற மீன் அல்லது கால்நடைச் செல்வங்களைப் பயன்படுத்தி, ஆயத்த உணவு தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை அங்கே கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் தொழில் முனைவோர், பின்தங்கிய பகுதியாக இருந்தும் வரவில்லை என்று